# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8069033

1. District : Tiruppur PS: VSAC Year: 2023 FIR No. 6/2023/AC/TPR. Date: 19.10.2023
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by the PC (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : June-2023 Date to : 18.10.2023
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : – Time to : 12.15 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 19.10.2023 Time : 09.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 19.10.2023 Time : 09.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written Tamil
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 2 km South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Kumar Nagar, Water tank.
Beat Number : (b) Address : Zone-II, Tiruppur.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : L. Palanivel (b) Father's/ Husband's Name : S. Lakshmanan
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 56/2023 (d) Nationality Indian (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Contractor & Businessman (g) Address : Door No. 294/2A, Mullai Nagar Periandipalayam, Mangalam Road, Tiruppur.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Chandra Sekar, Junior Engineer, Tiruppur City Municipal Corporation, Zone-II, Kumar Nagar, Water tank, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/10/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.10.2023.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. SASI LEKHA
Rank: நிலை Inspector of Police,
VSAC, Tiruppur
19.10.2023

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 06/2023/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 19.10.2023-ம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.L.பழனிவேல், த/பெ.லஷ்மணன், கதவு எண், 294/2A, முல்லை நகர், பெரியாண்டிபாளையம், மங்கலம் ரோடு, திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் L.பழனிவேல், த/பெ.லஷ்மணன், கதவு எண்.294/2A முல்லை நகர், பெரியாண்டிபாளையம், மங்கலம் ரோடு, திருப்பூர். செல் நம்பர் 9994358701 பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், மங்கலம் ரோடு, பெரியாண்டிபாளையம், முல்லை நகரில் வசித்து வருகிறேன். நான் அருள்முருகன் என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். மேலும், நான் திருப்பூர் மாநகராட்சியில் வகுப்பு III ஒப்பந்ததாரராக இருக்கிறேன். திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி, சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல், போர்வெல் மற்றும் பேவர் பிளக் அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டரில் நான் கலந்து கொண்டு திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.4 தோட்டத்துப்பாளையம் தெற்கு செல்போன் டவர் வீதியில் ஆழ்துளை கிணற்றில் பழுதடைந்துள்ள மின்மோட்டார், பேனல் போர்டு, கேபிள் மற்றும் குழாய்கள் மாற்றியமைக்கும் பணியை ரூ.4,30,000/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.49/N/2022-23 நாள் 08.07.2022 படியும், வார்டு எண்.4 திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு பணியை ரூ.3,50,000/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.50/N/2022-23 நாள் 08.07.2022 படியும், வார்டு எண்.4 ஜெ.ஜெ.நகர் எம்.ஜி.ஆர் காலனி பகுதிகளில் பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு பணியை ரூ.2,10,000/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.52/N/2022-23 நாள் 08.07.2022 - ன்படியும், வார்டு எண்.31 அப்பாச்சி நகர் 3வது தெருவில் சின்டெக்ஸ் டேங்க் ரூ.3,15,000/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு

எண்.152/N/2022-23 படியும், வார்டு எண்.31 கொங்குநகர் 2வது தெருவில் சப்மெர்சிபிள் பம்ப்செட் ரூ.3,00,000/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.154/N/2022-23 படியும், வார்டு எண்கள்.28, 30 தேவாங்கபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் ரூ.6,00,000/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.183/N/2022-23 - என்படியும் திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்தரவு எனக்கு வழங்கினார். மேற்படி ஒப்பந்தங்களை பணி உத்தரவில் குறிப்பட்டுள்ள அளவிலும், தரத்திலும், பணி முடிக்க வேண்டிய காலத்திலும் பணிகளை முடித்து கொடுத்தேன். நான் மாநகராட்சியில் மேற்படி டெண்டரில் எடுத்த பணிகளின் மதிப்பு ரூ.22,05,000/- ஆகும். மேற்படி பகுதிகளில் நடைபெற்ற பணிகளை திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -2 யை பார்க்கும் இளநிலை பொறியாளர் திரு.சந்திரசேகர் என்பவர் தான் பணிகளை பார்வையிட்டு அளவீடுகளை எம்.புத்தகங்களில் பதிவு செய்து, பில் தயார் செய்து அக்கவுண்ட் செக்சனில் கொடுத்தால் தான் வேலை செய்ததற்கான பில் தொகை விடுவிக்கப்படும். மேற்படி டெண்டர் மூலம் எடுக்கப்பட்ட வேலைகளை அவ்வப்போது முடித்தும் கடைசி வேலையான வார்டு எண்.4 திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு பணியை ஜூன் மாதம் 2023 வருடம் முடித்தேன். நான் ஒவ்வொரு வேலையையும் முடித்த பின்னர் குமார் நகரில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள இளநிலை பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று இளநிலை பொறியாளர் திரு.சந்திரசேகர் அவர்களை நேரில் சந்தித்து வேலை முடித்த 5 பணிகளுக்கான அளவீடுகளை எம்.புத்தகங்களில் எழுதி கொடுக்குமாறு கேட்டேன். அவரும் அவ்வப்போது 5 பணிகளுக்கான அளவீடுகளை எம்.புத்தகங்களில் எழுதி பில்லை அக்கவுண்ட் செக்சனில் கொடுத்தார். மேற்படி 5 பில்களுக்கு ஒரு பில்லுக்கான தொகை மாநகராட்சியிலிருந்து எனக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 4 பில்களுக்கான தொகை மாநகராட்சியிலிருந்து விடுவிக்கப்படவில்லை. நான் கடைசியாக முடித்த திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு வேலைக்கான அளவீடுகளை எம்.புத்தகத்தில் எழுதி அக்கவுண்ட் செக்சனுக்கு கொடுக்குமாறு இளநிலை பொறியாளர் திரு.சந்திரசேகர் அவர்களை அவரது அலுவலகத்தில் ஜூன் மாதத்தில் சந்தித்து கேட்ட போது நீங்கள் ரூ.22,05,000/- மதிப்பில் டெண்டர் வேலைகளை எடுத்துள்ளீர்கள். அதற்கு அவர் எனக்கு தனியாக பணம் ரூ.25,000/-

தர வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் டெண்டரில் குறிப்பிட்டுள்ள அளவிலும், தரத்திலும், குறிப்பிட்ட காலத்திலும் சிறப்பாக செய்துள்ளேன் என்று கூறினேன். அதற்கு அவர் ஏற்கெனவே முடித்த 5 வேலைகளுக்கும் சேர்த்து தான் பணம் கேட்டுள்ளேன், நீங்கள் பணம் கொடுத்தால் தான் திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு பணி செய்ததற்கான எம்.புத்தகத்தை எழுதுவேன் என்று சொன்னதால் நான் திரும்ப வந்துவிட்டேன். அதன்பின்னர் அவரது அலுவலகத்திற்கு பலமுறை நேரில் சென்றும், செல்போன் மூலமாக பேசியும் எம்.புத்தகத்தை எழுதி பில்லை அக்கவுண்ட் செக்சனுக்கு கொடுக்குமாறு கேட்டேன். அவர் ஏற்கெனவே கூறிய தொகையை கொடுத்தால் தான் எம்.புத்தகத்தை எழுதுவேன் என்று கூறினார். இந்நிலையில் 10.10.2023 தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு குமார் நகரில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்று கேட்ட போது நான் உங்களிடம் எந்த தொகையும் வாங்காமல் 5 வேலைகளுக்கான எம்.புத்தகங்களை எழுதி கொடுத்துவிட்டேன், திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு பணி செய்ததற்கான எம்.புத்தகம் எழுத நீங்கள் எனக்கு ரூ.25,000/- கொடுத்தால் தான் எழுதி தர முடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். அதன்பின்னர் நான் திரும்பி வந்து விட்டேன். 14.10.2023 தேதி சுமார் 11.30 மணிக்கு அவரது அலுவலகத்திற்கு சென்று பார்த்த போது அவர் அலுவலகத்தில் இல்லை. உடனே எனது செல்போன் எண் 9994358701 லிருந்து அவரது செல்போன் எண் 9442510072 ற்கு தொடர்பு கொண்ட போது அவர் அழைப்பை எடுக்கவில்லை. சிறிது நேரத்தில் அவரது செல்போன் எண்ணிலிருந்து என்னை தொடர்பு கொண்டு தான் கோவிலுக்கு வந்துவிட்டதாகவும் எம்.புத்தகம் பாதி எழுதிவிட்டதாகவும் தான் கேட்டதில் மீதமுள்ள பணத்தை கொடுத்தால் எம்.புத்தகத்தை முழுவதும் எழுதி பில்லை கொடுத்துவிடுவதாக கூறினார். இதனைதொடர்ந்து 16.10.2023 தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு திரு.சந்திரசேகர் அவரது செல்போனிலிருந்து பேசி பணம் ரெடி செய்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் இன்னும் பணம் ரெடியாகவில்லை என்று கூறினேன். அதன்பின்னர் அன்றையதினம் இரவு சுமார் 9 மணிக்கு அவரது செல்போனிலிருந்து என்னிடம் பேசி காலையில் சொன்ன பணத்தை ரெடி செய்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் வங்கியில் கிளியரன்ஸ் ஆகாததால் பணம் ரெடியாகவில்லை என்று சொன்னேன். இன்று 18.10.2023 தேதி மதியம் 12.15 மணிக்கு திரு.சந்திரசேகர்

அவரது செல்போனிலிருந்து பேசி பணம் ரெடி செய்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் பணத்தை ரெடி செய்வதற்காக தான் வங்கிக்கு வந்துள்ளதாக கூறினேன். அதற்கு அவர் பணத்தை ரெடி செய்து விட்டு போன் செய்துவிட்டு வருமாறு சொன்னார். நான் திருப்பூர் மாநகராட்சியில் செய்த 5 ஒப்பந்த பணிகளுக்கான எம்.புத்தகங்களை எழுதி பில் தயார் செய்து அக்கவுண்ட் செக்சனுக்கு கொடுத்ததற்காகவும், வார்டு எண்.4 திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி குழாய் விஸ்தரிப்பு பணி நடைபெற்றதற்கான அளவீடுகளை எம்.புத்தகத்தில் பதிவு செய்து பில் தயார் செய்து கொடுப்பதற்காகவும், திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் -2 இளநிலை பொறியாளர் திரு.சந்திரசேகர் அவர்கள் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.25,000/-த்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx L.Palanivel, 19/10/2023. Sir, Received the complaint on 19.10.2023 at 09.00 hrs and made preliminary verification between 09.00 hrs to 09.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.6/2023/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 19.10.2023 between 09.30 hrs to 10.45 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 19/10/2023 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.L.Palanivel, S/o.Lakshmanan, Door.No.294/2A, Mullai Nagar, Periyandipalayam, Mangalam road, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 19.10.2023.